பக்கங்கள் 19 + 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 14 புதன்கிழமை 28.05.2024 | அதிர்வு 298

## கிராண்ட்பாஸ் விபத்தில் பெண் ஒருவர் மரணம்!

**சடலம் அடையாளம் காணப்படவில்லை**

கொழும்பு மாவட்டம், கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேல்ஸ் குமார மாவத்தை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழர் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிராக அழுத்தம் வழங்குங்கள்

**ஆஸி. தூதுவரிடம் சிறீதரன் எம்.பி. கோரிக்கை**

(எஸ்.நிதர்ஷன்)

ஆட்சி மாற்றத்தின் பின்னும் இந்த நாட்டில் திட்டமிட்ட வகையில் நடைபெற்று வரும் இன, மத ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக சர்வதேச அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டியுள்ளதன் அவசியம் உணர்ந்து, ஆஸ்திரேலிய அரசின் தீர்மானங்களும், இராஜதந்திர அழுத்தங்களும் ஈழத்தமிழர் நலன் சார்ந்து வலுப் பெற வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் போல் 04

# முதலமைச்சர் தும்புத்தடி என்றால் எம்.பிக்கள் என்ன விளக்குமாறா?

## கஜேந்திரகுமாரின் கருத்துக்கு சிவாஜிலிங்கம் இப்படி பதிலடி



(ந.லோகதயாளன்)

“முதலமைச்சர் தும்புத்தடி என்றால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன விளக்குமாறா?”

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம். 04



# திருமலை மாநகர சபையின் மேயராக சுப்ராவைத் தெரிவு செய்தது தமிழரசு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாநகர சபையின் மேயராக கந்தசாமி செல்வராசா (சுப்ரா) தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 04



# ஆழ்கடலில் கூட்டு நடவடிக்கையில் அதிக போதைப்பொருள்கள் மீட்பு!

## இரண்டு மீன்பிடிப் படகுகளுடன் 11 பேர் கைது

(ந.லோகதயாளன், எஸ்.ஜினோதன்)

இலங்கையின் தெற்கு ஆழ்கடலில் பெருமளவிலான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதனைக் கடத்திய இரண்டு மீன்பிடிப் படகுகளுடன் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள் ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாத்தறை, தெவுந்தர பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

சந்தேகநபர்களிடமிருந்து 450 கிலோகிராம் ஐஸ் மற்றும் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்த இரண்டு மீன்பிடிப் படகுகளும் திக்கோவிட்ட துறைமுகத்துக் குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.















# யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி பிரபாவின் பூதவுடலுக்குப் பலரும் அஞ்சலி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அலுவலர் பிரம்மஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரன் சர்மாவின் பூதவுடலுக்குப் பல்வேறு தரப்பினரும் அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் பூதவுடல் இன்று புதன்கிழமை காலை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

அதன்போது, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஸ்ரீ சந்தோஷ் ஜா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா, தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் அஞ்சலி செலுத்தினர்.

வவுனியா – ஓமந்தை பகுதியில் கடந்த திங்கள்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில், யாழ். இந்தியத் துணை தூதரக அலுவலர் பிரம்மஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரன் சர்மா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

பிரபாகரன் சர்மா தனது தனிப்பட்ட விஜயமாக வட இந்தியா இமயமலை சாரலுக்கு வழிபாட்டுக்காகச் சென்றுவிட்டு கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நாடு திரும்பி யாழ்ப்பாணத்துக்குக் காரில் வந்து கொண்டிருந்த வேளை டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகினார்.

இந்த விபத்தில் அவரது மனைவி, மகன் மற்றும் மாமனார் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.









# உரிய கவனிப்புகள் எவையுமின்றி தெல்லிப்பழை ஆஸ்பத்திரி அவலம்!

(எஸ். நிதர்ஷன்)

யாழ். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நோயாளிகளுக்கான வசதிகள் சரியாக கவனிக்கப்படுவதில்லை எனவும் வைத்தியசாலை சுற்றாடல் துப்பரவு செய்யப்படுவதில்லை எனவும் நோயாளிகளும் வைத்தியசாலைகளுக்கு வருவோரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நோயாளர்களுக்கான அனுமதி வழங்குமிடத்தில் போதிய ஊழியர்கள் கடமையில் இருப்பதில்லை. பெண் நோயாளிகளுக்கான விடுதியில் ஆண் துப்பரவாளர்களே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு பொதுவான சீருடை வழங்கப்படாமல் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் பணியாளர்கள் யார் பொது மக்கள் யார் என்பது கூட தெரியாமல் இருப்பதாக நோயாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பெண்கள் விடுதிகளில் உள்ள மலசலகூடங்களில் குறிப்பாக புற்று நோய் பிரிவில் உள்ள பெண்கள் மலசலகூடங்கள் உரிய முறையில் துப்பரவு செய்யப்படாமலும் இருப்பதாக நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

பலமுறை வைத்தியசாலை நிர்வாகத்திடம் தெரிவித்த போதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என நோயாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனைவிட மிகவும் மோசமான நிலமை என்னவென்றால் இந்தளவு துப்பரவற்ற மலசலகூடத்துக்கு முன்பாகவே நோயாளிகளின் உணவருந்தும் அறை காணப்படுகின்றது.

இதனால் நோயாளிகளால் உணவை கூட ஒழுங்காக உண்ண முடியாத அருவருக்கத்தக்க நிலமை காணப்படுகிறது என்று நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

இவை தவிர வைத்தியசாலை சுற்றாடலில் குட்டை பிடித்த கட்டாக்காலி நாய்களும் சிரமம் அளிக்கின்றன என்று நோயாளிகள் கூறுகின்றனர்.

குப்பைகள் ஒழுங்கான முறையில் அகற்றப்படாமலும் மருந்து துடைத்த பஞ்சுத் துண்டுகள் கூட சரியாக அகற்றப்படாமல் ஆங்காங்கே வீசப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கின்றனர்.

எனவே இவை தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என நோயாளிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முதலமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நிறுத்தப்படுவார் எனக் கூறப்படுகின்றது. இந்நிலையில், வடக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றால் அது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?' – என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியிடம் யாழ். கொக்குவிலில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். இதற்குப் பதிலளித்த கஜேந்திரகுமார் எம்.பி., "மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றால் நிச்சயம் நாங்கள் போட்டியிடுவோம். ஏனைய கட்சிகளின் முதலமைச்சர் வேட்பாளர்களின் பெயர்களைக் கருத்தில்கொண்டால் நாங்கள் ஒரு தும்புத்தடியை நிறுத்தலாம் என நினைக்கின்றோம்." – என்று கூறியிருந்தார்.

கஜேந்திரகுமார் எம்.பியின் மேற்படிக் கருத்து தொடர்பில் யாழ். வடமராட்சி கிழக்கில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் சிவாஜிலிங்கத்திடம் கேள்வி எழுப்பியபோது, "முதலமைச்சர் தும்புத்தடி என்றால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன விளக்குமாறா?" – என்று அவர் திரும்பக் கேள்வி எழுப்பினார்.

## கிராண்ட்பாஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க் கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

ஒருகொடவத்தை சந்தியிலிருந்து ஆமர் வீதி பாபர் சந்தி நோக்கிப் பயணித்த பாரவூர்தி ஒன்று வீதியில் பயணித்த பெண் ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த பெண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் தொடர்பில் இது வரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

பாரவூர்தியின் சாரதியைக் கைது செய்துள்ள கிராண்ட்பாஸ் பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்டீபன்ஸிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவருடன் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், அரசாங்க மாற்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் முதல் உள்ளூராட்சி சபைத் தேர்தல் வரையிலான தற்போதைய தமிழ் அரசியல் குறித்து தூதுவரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு தொடர்பான காணிப் பிரச்சினைகள், வடக்கு மாகாணத்தில் சுமார் 6000 ஏக்கர் காணிகளை அரசு காணிகளாக அறிவிக்கும் சர்ச்சைக்குரிய வர்த்தமானி அறிவிப்பு, தமிழ் பேசும் மக்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கில் காணி, பொலிஸ் மற்றும் நிதி ஆகியவற்றில் மீளமுடியாத அதிகாரங்களைக் கொண்ட சமஷ்டி அடிப்படையில் அரசியல் தீர்வு போன்ற விடயங்கள் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், மேற்படி விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசுக்கு அழுத்தம் வழங்குமாறும் ஆஸ்திரேலியத் தூதுவரிடம் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் ஆஸ்திரேலியத் தூதுவருடன் அவரது துணைவியார் கிரிட்டினா ஸ்டீபன்ஸ், திட்ட ஒத்துழைப்புக்கான முதல் செயலாளர் திருமதி ஜோகிட், அரசியல்துறைக்கான இரண்டாவது செயலாளர் மேத்யூ லார்ட் மற்றும் மூத்த ஆராய்ச்சி அதிகாரி சில்வெஸ்டர் வொர்திங்டன்ஆகியோரும்கலந்துகொண்டனர்.

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை அலுவலகத்தில் இன்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இந்தத் தீர்மானத்தை நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்டக் குழுத் தலைவருமான சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

சபைக்காகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் அலுவலகத்துக்கு வரவழைக்கப்பட்டு இந்தத் தெரிவானது ஜனநாயக முறையில் வாக்கெடுப்பின் மூலம் இடம் பெற்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முதலாவது திருகோணமலை மாநகர சபைக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் 9 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தி சார்பாக 6 உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பாக 4 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் இரண்டு சுயேச்சைக் குழுக்கள் சார்பாக தலா ஒரு



# யாழ். போதனா வைத்தியசாலைக்கு 208 சிங்களத் தாதியர்கள் நியமனம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு புதிதாக இரண்டு தாதிய பரிபாலர்களும், 268 தாதிய உத்தி யோகத்தர்களும் இன்று புதன்கிழமை நியமனம் பெற்று வந்துள்ளார்கள்.

தாதிய பதிபாலர்களுக்கான வெற்றி டங்கள் ஐந்து இருக்கின்றபோதும் இரண்டு நியமனங்களே வழங்கப்பட் டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே சேவையில் உள்ள தாதிய உத்தியோகத்தர்களில் 168 பேர் வருடாந்த இடமாற்றம் பெற்று செல்ல வுள்ள நிலையில், புதிதாக வருகை தந்தவர்களில் 60 பேர் தமிழ் மொழி சார்ந்தவர்களாகவும், ஏனைய அனை வரும் சகோதர மொழி பேசுபவர்க ளாகவும் இருக்கின்றமை குறிப்பிடத் தக்கது

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமனம் பெற்று வந்த 268 புதிய தாதிய உத்தியோகத்தர்களை வரவேற் கும் நிகழ்வு தாதியர் பயிற்சிக் கல்லூ ரியில் நடைபெற்றது.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பேரினவாத வலை!

எப்படியும் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக, தான் உருவாக் கப்பட்ட காலத்திலிருந்தே சந்தர்ப்ப வாதத்தைப் பயன்படுத்தி வந்தது தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளி கட்சியான ஜே.வி.பி.அதன் பரவணிப் பழக்கத்திலிருந்து அது வேறுபட்டு மாறுவது என்பது மிகச் சிக்கலான விடயம்.

1971 இல் தனது முதல் கிளர்ச்சியின் போது இடதுசாரித்துவத்தை கையில் எடுத்த அத்தரப்பு, பின்னர் இந்த அரசி யல் போட்டோ போட்டிகளுக்குள் மக்கள் ஆதரவை பெற்று மேலெழுவதற் கான இலகுவான - சந்தர்ப்பத்துக்கு ஏற்ற - உத்தி, பேரினவாதத்தைக் கிளப்பு வதுதான் என்று கருதி, பௌத்த - சிங்கள மேலாதிக்க பேரினவாதத்தை தனது கையில் எடுத்துக் கொண்டது.

ஒருபுறம் முன்னைய அரசுத் தலை வர்களின் ஊழல், மோசடி, தவறான அரசியல் நிர்வாகம், குளறுபடிகள் போன்றவற்றினால் நாட்டுக்கு ஏற்பட்ட மோசமான பின்னடைவைப் பயன்ப டுத்தி மாற்றுத் தலைமையாகத் தங்களை காட்டிக் கொண்ட ஜே.வி.பி., ஜனநாயக ரீதியில் பெரும்பான்மை இனத்தவர்களி டையே ஊடுருவி ஆதரவைப் பெறுவ தற்கு பேரினவாத மேலாதிக்கப் பெரும் சக்தியாகவும் தன்னைக் காட்டிக் கொண்டது.

இந்த இரட்டை வேட அணுகுமுறை, நாட்டின் ஆட்சி அதிகாரத்தை போதிய ஜனநாயக வலிமையோடு அதன் மடியில் கொண்டு வந்து சேர்த்துள்ளது.

இப்போது, நாட்டை இந்த நெருக்கடி நிலையில் இருந்து மீட்பதானால், நாட்டில் புரையோடிப் போயிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு சுமுகமான - இணக்கமான - நீதி, நியாயமான - சம் பந்தப்பட்ட எல்லாத் தரப்புகளும் ஏற் றுக் கொள்ளக்கூடிய - நின்று, நிலைத்து, நீடிக்க கூடிய - ஒரு தீர்வைக் காண வேண்டியது தவிர்க்கவே முடியாத கட்டாயம் என்பது இந்த இரட்டைத் தந்திரோபாய அணுகு முறையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய ஆட்சித் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவுக்கு நன்கு விளங்குகிறது.

அத்தகைய சுமுகமான தீர்வு ஒன்றைக் காண்பதாயின் பேரினவாத சகதியிலி ருந்து வெளியே வந்தால் மட்டுமே அது சாத்தியம் என்பதும் அவருக்குப் புரிகின்றது. ஆனால் காலம் காலமாகத் தாம் பின்னி, முன்னெடுத்து வந்த பேரின வாத வலையில் இருந்து அவரால் வெளி யில் வந்து ஒரு சுமுகத் தீர்வைக் காண முடியாமல் இருக்கின்றது. இதுதான் யதார்த்தத்தில் அவர் இன்று எதிர்கொண்டு நிற்கும் பெரும் அரசியல் நெருக்கடி ஆகும்.

படையினரின் பதினாறாவது ஆண்டு யுத்த வெற்றித் தினக் கொண்டாட்டங்க ளில் பங்குபற்றாமல் தவிர்க்க அவர் எடுத்த முயற்சி -

பின்னர், சூழ்நிலை அழுத்தங்களால் அதில் பங்கு பற்றிய போதிலும், யுத்தத் தில் மடிந்த படையினரை வெற்றிக் கதாநாயகர்களாக (*War Heroes*) காட்டா மல், வெறும் துருப்புகளாக - சிப்பாய்க ளாக (*Soldiers*) - தமது பேச்சில் அவர் விளித்து அடையாளப்படுத்தியமை -

அங்கு தமது உரையில் "தெற்கில் மட்டுமல்ல, வடக்கிலும் கூட, மக்கள் தங்கள் கணவர்கள் மற்றும் குழந்தைக ளின் படங்களை தெருக்களில் உயர்த்தி, அவர்களின் மரணங்களுக்கு இரங்கல் தெரிவிக்கின்றனர். ஒவ்வொரு பெற்றோ ருக்கும், அவர்களின் குழந்தை விலை மதிப்பற்றது. எனவே, இவ்வளவு பெரிய துயரத்தை எதிர்கொண்ட ஒரு நாடாக, இன்று நமது பொறுப்பு, அத்தகைய போர் நம் நாட்டில் மீண்டும் நிகழாமல் தடுப்பதாகும்" என்று குறிப்பிட்டமை-

போன்றவை அவர் யுத்தத்தில் சம்பந் தப்பட்ட இரண்டு தரப்புகளுக்கும் நடு வில் இரண்டு தரப்பையும் சமாளிக்கும் விதத்தில் ஒரு நடுநிலையாளராக தம்மை முன்னிறுத்த விரும்பும் முயற்சியில் ஈடுபாடு காட்டுகிறார் என்பதையே வெளிப்படுத்துகின்றது.

ஆனால், ஆட்சி அதிகாரத்தை கைப்பற் றுவதற்காக, காலம் காலமாக அவரும் அவரது கட்சியினரும் வளர்த்து நிலை நிறுத்திய பேரினவாத சகதிக்குள் இருந்து அவர் வெளியே வருவது என்பது இல குவில் சாத்தியப்படக் கூடியது அல்ல. அவரது அத்தகைய முயற்சி அவர் பின் னிய பேரினவாத வலைக்குள் அவரையே விழுத்தி சங்காரம் செய்து விடும் ஆபத்து இருப்பதையும் மறுக்க முடியாது.



# கடவுச்சீட்டு அலுவலகத்தை பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்!

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் துரிதகதியில் புனரமைக்கப்பட்டுவரும் கடவுச்சீட்டு அலுவலகத்தை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நேற்று செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் சகிதம் பார்வையிட்டார்.

இதன் போது இதுவரை நடைபெற்ற வேலைகளின் முன்னேற்றத்தை அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

கடவுச்சீட்டு பெறவரும் பொதுமக்கள் அமர்ந்திருக்கும் இடத்தில் அமைக்கப்படவுள்ள கொட்டகை மற்றும் கடவுச்சீட்டு அலுவலகத்தில் கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி விவரங்களை அமைச்சருக்கு மாவட்ட செயலர் எடுத்துக் கூறினார்.



# பதவிக்கலம் முடிந்து செல்லவுள்ள வத்திக்கான் தூதர் - பிரதமர் சந்திப்பு

தனது பதவிக்காலம் முடிவடைந்து நாட்டிலிருந்து செல்லும் இலங்கைக்கான வத்திக்கான் தூதர் மான்சிக்னர் பிரையன் உடைக்வேவை பிரதமர் ஹரிணி அமரசூரிய சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பானது நேற்று (27) அலரி மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

வத்திக்கானுடனான இராஜதந்திர உறவுகளுக்கு 2025 ஆம் ஆண்டு 50 ஆண்டுகள் நிறைவடைகின்றது.

இந்த நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நட்புறவை வலுப்படுத்துவதில் தூதர் உடைக்வேயின் குறிப்பிடத்தக்க



பங்களிப்பைப் பிரதமர் இதன்போது பாராட்டியுள்ளார்.

இந்த நிகழ்வு தொடர்பாக பிரதமர் தனது சமூக வலைதளத்திலும் பதிவிட்டு, தூதருக்கு நன்றியைத் தெரிவித்திருந்துள்ளார்.



# மன்னார், வங்காலையில் கடலரிப்பு; பார்வையிட்டார் ரவிகரன் எம்.பி.!

**(விஜயரத்தினம் சரவணன்)**

மன்னார் – நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட, வங்காலைப் பகுதியிலுள்ள கடலரிப்பு நிலைமைகளை, அந்தப் பகுதி மக்களின் அழைப்பையேற்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று (27) நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

இந்த நிலையில் அந்தப் பகுதி மக்களின் இடர்பாடுகளைக் கேட்டறிந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், கடலரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் தெரிய வருகையில்,

வங்காலை பகுதியில் கடலரிப்பு நிலமைகள் அதிகரித்துள்ளதால் கடல் நீர் கடற்கரையோர கிராமங்களுக்குள் உட்புகும் நிலைமை காணப்படுகின்றது. இதனால் அந்தப் பகுதி மக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையிலேயே இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு இந்த விடயம் அந்தப் பகுதி மக்களால் தெரியப்படுத்தப்பட்டது. இதையடுத்து, அவர் இவ்வாறு நிலைமைகளை நேரடியாகச்சென்று பார்வையிட்டார். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

ஏற்கனவே கடலரிப்பைத் தடுப்பதற்கு வங்காலைப் பகுதியில் தடுப்பணை அமைக்கப்பட்டதைப்போன்று, ஆறு இடங்களில் தடுப்பணைகள் அமைக்கப் படவேண்டும் எனவும், இதன்மூலமே கடல் நீர் கிராமத்துக்குள் உட்புகுவதைத் தடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடலரிப்பால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும் எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், இந்த சிக்கல் நிலமை தொடர்பில் உரிய தரப்பினரது கவனத்துக்குக் கொண்டுசென்று, தடுப்பணை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# ஒவ்வொரு குற்ற செயலுக்குப் பின்னாலும் கடந்த கால அரசியல்வாதிகள் உள்ளனர்!

## கந்தசாமி பிரபு எம்.பி. சுட்டிக்காட்டு

நாட்டில் துப்பாக்கி கலாசாரம் என்பது பாதாள உலகம் கோஷ்டிகளுடன் சம்பந்தப்பட்டவர்களின் நடவடிக்கையாகத் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது என்று என நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு குற்ற செயல்களுக்கு பின்னாலும் கடந்த கால அரசியல்வாதிகள் ஒவ்வொருவருக்கும் தொடர்புகள் இருக்கின்றன எனவும் கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதேபோன்று அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்காக பலபேர் கைது



செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. அந்த வகையில் சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கான தண்டனை வழங்கப்படும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின்படி வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரையில் நாம் இரண்டாம் நிலையில் இருக்கும் கட்சியாக தான் நாம் இருக்கின்றோம்.

பல கட்சிகள் எம்முடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டு இருக்கின்றன.

நாங்கள் இதுவரைக்கும் எந்தவித முயற்சிகளையும்மேற்கொள்ளவில்லை. ஆனாலும் மற்றைய கட்சிகளுடன் இணைந்து செயல்படுவதில் எந்த அபிப்பிராயங்களும் இல்லை. ஆனால் மக்களின் தேவை எதுவாக இருந்தாலும் அந்த தேவைகளின் படி நாங்கள் பயணிப்பதற்குத் தயாராக இருக்கின்றோம்.–என்றார்.

# செலவுக் கணக்குகளைச் சமர்ப்பிக்காத வேட்பாளர் பட்டியல் இன்று பொலிஸாரிடம்




உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட்ட வேட்பாளர்களில் தமது செலவுக் கணக்குகளை சமர்ப்பிக்காத வேட்பாளர்களின் பட்டியல் இன்று (28) பொலிஸாரிடம் கையளிக்கப்படவுள்ளது.

2023 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க தேர்தல் செலவுகளை ஒழுங்குப் படுத்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் செலவுகள் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் தொடர்பான விவரங்கள் பொலிஸ்மா அதிபருக்கு இன்று (28) சமர்ப்பிக்கப் படவுள்ளன.

அதன் பின்னர் குறித்த வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2025.05.06 ஆம் திகதியன்று நடத்தப் பட்டு, தேர்தல் முடிவுகள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க தேர்தல் செலவுகள் ஒழுங்குப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் செலவுக் கணக்கை சமர்ப்பிக்குமாறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப் பட்டிருந்தது.

தேர்தல் முடிவுகள் வெளியாகி 21 நாள்களுக்குள் குறித்த விவரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதற்கமைய விவரத் திரட்டைச் சமர்பிப்பதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்று செவ்வாய்க்கிழமை (27) நிறைவடைந்தது.

தேர்தல் செலவினங்களைச் சமர்ப்பிப்பதற்குச் சட்டத்தின் பிரகாரம் கால நீட்டிப்பு வழங்கப்படமாட்டாது என்பதை ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

ஆகவே குறித்த காலப் பகுதிக்குள் செலவின விவரங்களைச் சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் உறுப்பினர்களது விவரங்களைப் பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சீனாவின் கடன் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் 75 நாடுகள்!



உலகில் மிக மோசமான பொருளாதார நிலையில் இருக்கும் 75 நாடுகள் சீனாவிடம் இருந்து வாங்கிய கடனை இந்த ஆண்டு திருப்பிச் செலுத்தும் கடும் நெருக்கடியில் சிக்கியுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.

வெளியான அறிக்கையின் அடிப் படையில், இந்த 75 நாடுகளும் மொத் தமாக 22 பில்லியன் அமெரிக்க டொலர் தொகையை சீனாவுக்கு இந்த ஆண்டு திருப்பிச் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடுகள் மொத்தமாக 35 பில்லியன் அமெரிக்க டொலர் தொகையை சீனாவிடம் இருந்து இதுவரை கடனாகப் பெற்றுள்ளன என்று தெரியவந்துள்ளது.

இந்தக் கடன்கள் அனைத்தும் ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் கனவுத் திட்டமான பெல்ட் மற்றும் சாலை முன்முயற்சியின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு முதல் அடுத்த பத்தாண்டுகளுக்கு ஏற்கனவே அளித்துள்ள கடனைத் திருப்பி வாங்கும் நடவடிக்கைகளில் சீனா ஈடுபடும் என்றே கூறுகின்றனர்.

சீனாவுக்குப் பெருந்தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டிய அழுத்தம் காரணமாக சுகாதாரம் மற்றும் கல்விக்கான உள்ளூர் நிதியுதவியை குறைக்கும் நிலை பல நாடுகளுக்கும் ஏற்பட இருக்கிறது.

2016 இல் மட்டும் இந்தத் திட்டத்துக்கெனச் சீனா 50 பில்லியன் டொலர் தொகைக்கும் அதிகமாகக் கடனாக அளித்துள்ளது.

ஆனால், ஏழை நாடுகளுக்குக் கடன் அளித்து அந்த நாடுகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் சிக்க வைக்கும் சீனாவின் சூழ்ச்சி இதுவெனக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட நிலையில், சீனா அதைப் புறந்தள்ளியுள்ளது. அதுமட்டுமின்றி, கடன் வாங்கிய நாடுகளும் சீனாவுக்கு எதிராகக் கருத்து தெரிவிக்க மறுத்துள்ளன.

மேலும், புதிதாக சில நாடுகளுக்கும் சீனா பெருமளவு கடன் அளித்து வருகிறது என்று தகவல் வெளியாகியுள்ளது.

தைவானில் இருந்து சீனாவுக்குத் தங்கள் தூதரக உறவை மாற்றிய 18 மாதங்களுக்குள் ஹோண்டுராஸ், நிகரகுவா, சாலமன் தீவுகள், புர்கினா பாசோ மற்றும் டொமினிகன் குடியரசு ஆகிய நாடுகளுக்கு கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், கஜகஸ்தான், லாவோஸ் மற்றும் மங்கோலியா, அத்துடன் அர்ஜென்டினா, பிரேசில் மற்றும் இந்தோனேசியா போன்ற முக்கியமான கனிமங்கள் மற்றும் உலோகங்களை உற்பத்தி செய்யும் நாடுகளுக்கும் சீனா தொடர்ந்து கடன் அளித்து வருகிறது.

2021 இல் வெளியான தரவுகளின் அடிப்படையில் சீனா இதுவரை பல நாடுகளுக்கு 385 பில்லியன் அமெரிக்க டொலர் தொகையைக் கடனாக அளித்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

# பாடசாலைகளில் துஷ்பிரயோகங்கள்; அதிபர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு



பாடசாலைகளில் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளன என்று கல்வி, உயர்கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹறினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்குள் அதிக எண்ணிக்கையிலான துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலைகளில் பிள்ளைகள் துன்புறுத்தப்படுவதை அனுமதிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளில் இடம்பெறும் துன்புறுத்தல்கள் தொடர்பில் அதிபர்கள் துரிதகதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கொழும்பு மாவட்ட அதிபர்களைத் தெளிவூட்டும் நிகழ்வில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



# இந்திய கடற்றொழிலாளர் அத்துமீறலை தடுக்க நடவடிக்கைகளை முன்னெடுங்கள்!

## தேவையான உதவிகளை அமைச்சு வழங்கும் என்கிறார் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்



இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை தடுப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுக்குமாறும், தேவையான உதவிகளை வழங்கக் கடற்றொழில் அமைச்சு தயாராக உள்ளது என்றும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலைத் தொடர்ந்து, ஊடகங்கங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இந்த விடயத்தைக' கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கடற்படை, பொலிஸ், இராணுவம் உள்ளிட்டோரின் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

சட்டவிரோத தொழில் நடவடிக்கையால் எமது சொத்துக்கள் அழிக்கப்படுவதோடு எதிர்கால சந்ததிக்கு இல்லாது போகின்றது.

இந்த சட்டவிரோத தொழில் நடவடிக்கையை தடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எவருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. கடற்படை மற்றும் ஏனைய துறைசார்ந்தவர்களோடு விரிவாக பேசியிருக்கின்றோம். விரைவாக நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கடற்படையினருக்கு அறிவுறுத்தியிருக்கின்றோம்.– என்றார்.



# யாழ். மாநகர சபை ஆணையாளரிடம் நல்லூர் பட்டோலைக் காளாஞ்சி வழங்கல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழா எதிர்வரும் ஜுலை மாதம் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருவிழாவுக்கான ஆலய சூழல் பராமரிப்பு, ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்தல், வீதி தடைகள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழிசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ். மாநகர சபை ஆணையாளரிடம் ஆலய சம்பிரதாய முறைப்படி நேற்று செவ்வாய்க்கிழமை பெருவிழா பட்டோலை அடங்கிய காளாஞ்சி ஆலய கணக்கு பிள்ளையால் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு பாரம்பரிய முறைப்படி பல ஆண்டு காலமாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# தகுதியுடையோருக்கு மட்டும் உர மானியம் வழங்கப்படும்!

## விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த



உரிய தகுதியுடையவர்களுக்கு மட்டும் உர மானியம் வழங்கப்படும் என்று விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

உரிய காலத்தில் உரியவர்களுக்கு மட்டும் உர மானியங்கள் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவை செயலாளர்கள் மற்றும் நிறுவனப் பிரதானிகளுடன் நடைபெற்ற உயர் மட்ட கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது ஒவ்வொரு அமைச்சும் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் விவசாய ஆய்வு உதவியாளர் பதவி வெற்றிடங்கள் 35 வீதம் உள்ளது எனவும் இதனால் உர மானியங்கள் வழங்குவதில் கால தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# பருத்தித்துறை ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது

(வடமராட்சிச் செய்தியாளர்)

பருத்தித்துறை பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று (27) நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயசந்திர மூர்த்தி றஜீவன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தின் போது, கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன் னேற்ற நிலை பரிசீலிக்கப்பட்டது. பல தீர்மானங்கள் வெற்றிகரமாக நிறை வேற்றப்பட்டுள்ளன என்றும் அவற்றுக் குப் பாராட்டும் தெரிவித்தார்.

இன்றைய கூட்டத்திலும் பல முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் நடைமுறைப்படுத்தல் தொடர் பாக தொடர்ச்சியான கண் காணிப்பு மற்றும் அவதானம் மேற் கொள்ளப்படு மென கூட்டத்தில் வலி யுறுத்தப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் மாதந்தோறும் தொடர்ச்சி யாக நடைபெறும் என அறிவித்திருந்தார்.

பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்படுவதே முக்கிய நோக்கமாகும் என்று அதிகாரிகளுக்கு வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அரச அதிகாரி கள், மற்றும் உள்ளூர் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



# விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய திருவிழா!

சாவகச்சேரி, நுணாவில் மேற்கு, விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்குக் கொடியேற்றத் திரு விழாவுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 8 ஆம் திகதி இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 9 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திரு விழாவும் அன்று இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் 11 ஆம் திகதி காலை



9.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷே கமும் அன்று மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் 12 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம்பெறவுள்ளன.

ஆலய பிரதம குரு பண்டிதர் சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள், மஹோற் சவ குரு கிரியாரத்தினா சிவஸ்ரீ ராம் சண் முகானந்தக் குருக்கள், ஆலயகுரு பிரம்மஸ்ரீ ராஜ்குருக்கள் யதீஸ்வரசர்மா ஆகியோர் கிரியைகளை நடத்தி வைக் கவுள்ளனர். விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய போஷகர் மாவை ஆதீனம் மஹாராஜ ஸ்ரீ மாவை து.ச.ரத்தின சபாபதிக்குருக் கள் ஆசி யுரை வழங்கவுள்ளார்.

# கோவிற்குடியிருப்புக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தேவை!

## அமைக்கக் கோருகிறார் குடிசார் அமைப்புக்களின் பிரதிநிதி லலிதாராணி

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கோவிற்குடியிருப்புக் கிராமத்தில் நிரந்தரமாக ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் பிரதிநிதியும் சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினருமான திருமதி லலிதாராணி கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊராட்சி முற்றக் குறை கேள் கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கோவிற்குடியிருப்பு கிராமம் அதிக சனத்தொகையைக் கொண்ட பரந்த கிராமமாக காணப்படுகின்ற போதிலும் அங்கு பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான நிரந்தர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் இல்லை.

கிராமத்தில் சனசமுக நிலையங்கள், வீடு என நான்கு இடங்களில் மேற்படி சேவை தற்காலிகமாக இடம்பெறுகின்றது. இந்த இடங்களில் முறையான



மலசலகூட வசதி உள்ளிட்ட வசதிகள் இன்மையால் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தற்காலிக ஆரம்ப சுகாதார நிலையங்கள் உரிய வசதி வாய்ப்புக்கள் இன்றிக் காணப்படுவதால் அங்கு எடை மட்டுமே அளவிடப்படுகின்றது.

மேலதிக சேவைகளுக்காக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குச் செல்ல வேண்டிய தேவை உள்ளது. அங்கும் போதிய இடவசதி இல்லை.

எனவே கோவிற்குடியிருப்புக் கிராமத்தில் உரிய வளங்களுடன் நிரந்தரமாக ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் அமைக்கும் போது சிரமங்களைத் தவிர்க்க முடியும். – என்றார்.

மேற்படி கோரிக்கை தொடர்பில் கூட்டத்துக்குத் தலைமைவகித்த அரச அதிபர் ம.பிரதீபன் கருத்துத் தெரிவிக்கையில்,

கோவிற்குடியிருப்பு கிராமம் பெரிய கிராமம் என்பதால் கிராமத்தில் ஓர் இடத்தில் நிரந்தர கட்டடம் அமைத்து சேவை வழங்கினால் அது பொது மக்களுக்கு சிரமமாக இருக்கும்.

தற்போது சேவை முன்னெடுக் கப்படுகின்ற நான்கு தற்காலிக இடங்களிலும் உள்ள குறைபாடுகளை நீக்க முதற்கட்டமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்து கிராமத்திலேயே ஆரம்ப சுகாதார நிலையத்தின் சேவைகளை திறம்பட முன்னெடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் .– என்றார்.

# சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது தொடர்பில் விளக்கமளித்த அரச அதிபர்

யாழ் . மாவட்டத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பில், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் லக்ஸ்மன் அபயசேகரவுக்கு மாவட்ட செயலர் விளக்கமளித்துள்ளார்.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் லக்ஸ்மன் அபயசேகர யாழ்ப்பாண மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபனை திங்கட்கிழமை மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன் போது, யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் தேவைப்பாடுகள் சார் விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி , சுற்றுலாத்துறை மேம் பாடு , தாழையடி குடிநீர்த்திட்டம், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி



அதிகார சபையின் திட்டங்கள், வங்கிக் கடன் முறைமை, தொழில் தேடுவோருக்கான வேலைத் திட்டங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் பிராந்திய தொழில் முயற்சி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களை இனங்காணல், நிதி சார்ந்த விடயங்களை வங்கிகளுடன் கலந்துரையாடல் மற்றும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் பிராந்திய தொழில் முயற்சி அபிவிருத்தி மேம்பாடு, ஏற்றுமதி, பல்கலைக்கழகங்களில் புதிய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல், பாடசாலைகளில் புதிய தொழில் முயற்சிகளை உருவாக்குதல், சுற்றுலாத் துறையை மேம்படுத்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் பிரதிப் பணிப்பாளர் வசந்த சேனா நாயக்க, உதவிப் பணிப்பாளர் சசிகதிமெல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




# யாழ். கோட்டை, பழைய கச்சேரி போன்றவற்றை மரபுசார் சுற்றுலா நோக்கில் புனரமைக்கத் திட்டம்!



யாழ்ப்பாண கோட்டை மற்றும் யாழ்ப்பாண பழைய கச்சேரி போன்றவற்றை மரபுசார் சுற்றுலா நோக்கில் விருத்தி செய்வது தொடர்பில் உலக வங்கியின் பிரதிநிதிகளிடம் யாழ் . மாவட்ட செயலர் எடுத்து கூறியுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நிலையான பொருளாதார அபிவிருத்தி உட்டுகட்டுமாணம் மற்றும் சுற்றுலா துறைகளை விருத்தி செய்வது தொடர்பில் தற்போதய அரசின் கோரிக்கையின் பேரில் உலக வங்கி கடந்த இரண்டு மாதங்களாக பொருத்தமான திட்டங்கள் தொடர்பில் களத் தரிசிப்புக்கள் செய்து ஆராய்து அடிப்படைத் தரவுகளை பெற்றிருந்தது.

இதன் இறுதி அங்கமாக துறைசார்ந்து காணப்படும் அபிவிருத்தித் தேவைப்பாடுகள், தடைகள், அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் மற்றும் சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து திட்டங்களை உறுதிப்படுத்தும் வகையில் கடந்த மூன்று தினங்களாக வடக்கு மாகாணத்தின் உள்ள மாவட்ட செயலாளர்களைச் சந்தித்து வருகின்றனர்,

அவ்வகையில் திங்கட்கிழமை உலக வங்கியின் இலங்கைக்கான செயற்பாட்டு முகாமையாளர் அபிட் கலி, செயற்றிட்ட தலைவர் காயத்திரி சிங் மற்றும் உலக வங்கியின் ஏனைய பிரதிநிதிகள் உள்ளிட்ட ஆறு பேர் யாழ். மாவட்ட செயலரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அதனைத் தொடர்ந்து துறைசார் திணைக்களங்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில், யாழ். நகர வெள்ள வடிகாலமைப்பு அபிவிருத்தி, கழிவு நீர் சுத்திகரிக்கும் செயற்றிட்டம், மாவட்டத்திலுள்ள குளங்களை புனரமைக்கும் செயற்றிட்டம் , யாழ். நகர திண்மக்கழவு முகாமைத்துவம், யாழ்ப்பாண கோட்டை மற்றும் யாழ்ப்பாண பழைய கச்சேரி போன்ற வற்றை மரபுசார் சுற்றுலா நோக்கில் விருத்தி செய்தல், யாழ். மாவட்டத்தில் மீன்பிடி படகுத் தளம் மற்றும் மீன்பிடி துறைமுக அபிவிருத்தி, அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கான புதிய முதலீடுகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் திண்மக்கழிவு முகாமைத்துவம் ஆகிய திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் செயற்றிட்டங்கள் தொடர்பிலான திட்டங்கள், செயற்றிட்ட முன்மொழிவுகள் மற்றும் சாத்தியப்பாட்டு அறிக்கைகள் போன்றவற்றை விரைவில் சமர்ப்பிக்குமாறும் உலக வங்கி குழுவினர் கோரியிருந்தனர்.

இந்தக் கலந்துயாடலின் இறுதியில் யாழ்ப்பாண பழைய கச்சேரி வளாகத்துக்கு உலக வங்கிக் குழுவினரை மாவட்ட செயலர் அழைத்துச் சென்று புனரமைப்பின் அவசியம் தொடர்பில் நேரடியாக விளக்கமளித்தார்.



# பல்வேறு துறைகளில் சாதித்த 68 பேருக்கு பத்ம விருதுகள்

## நடிகை ஷோபனா, தொழிலதிபர் நல்லி குப்புசாமிக்கு பத்ம பூஷண்









குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று பத்ம விருதுகள் வழங்கப்பட்டன. அப்போது தமிழகத்தைச் சேர்ந்த நடிகை ஷோபனா, தொழிலதிபர் நல்லி குப்புசாமிக்கு பத்ம பூஷண் விருதுகள் வழங்கப்பட்டன.

தமிழகத்தை சேர்ந்த பறை இசைக் கலைஞர் வேலு ஆசான், மிருதங்க கலைஞர் குருவாயூர் துரை, புதுச்சேரியை சேர்ந்த தவில் இசைக் கலைஞர் தட்சிணாமூர்த்திக்கு பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட்டது. மொத்தமாக 68 பேருக்கு பத்ம விருதுகள் அளிக்கப்பட்டன.

கல்வி, இலக்கியம், அறிவியல், விளையாட்டு, சுகாதாரம், தொழில், வர்த்தகம், பொறியியல், பொது விவகாரங்கள், குடிமைப் பணி மற்றும் சமூக சேவை உள்ளிட்ட துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் பத்ம விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டுக்கான விருதுகள் கடந்த ஜனவரி 25 ஆம் திகதி அறிவிக்கப்பட்டன. இதன்படி பத்ம விபூஷண் விருதுக்கு 7 பேரும், பத்ம பூஷண் விருதுக்கு 19 பேரும், பத்மஸ்ரீ விருதுக்கு 113 பேர் என மொத்தம் 139 பேருக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டன.

முதல்கட்டமாக கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி 71 பேருக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பத்ம விருதுகளை வழங்கினார். மீதம் உள்ள 68 பேருக்கு நேற்று பத்ம விருதுகள் வழங்கப்பட்டன. குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர், பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, ஜெய்சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஓய்வு பெற்ற நீதிபதி ஜெகதீஷ் சிங் கேகர், குமிதினி லாகியா (மறைவு), சாரதா சின்ஹா (மறைவு) ஆகியோருக்கு பத்ம விபூஷண் விருதுகளை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வழங்கினார். மறைந்த பத்ம விபூஷண் விருதாளர்கள் சார்பில் குடும்பத்தினர் விருதுகளை பெற்றுக் கொண்டனர்.

பத்ம பூஷண் விருது தமிழகத்தை சேர்ந்த நடிகை ஷோபனா சந்திரசேகர், தொழிலதிபர் நல்லி குப்புசாமி மற்றும் பிபக் தேப்ராய், கைலாஷ் நாத் தீக்சித், ஜாலின் கோஸ்வாமி, மனோகர் ஜோஷி (மறைவு), ஆனந்த் நாக், சாத்வி ரிதம் பரா ஆகியோருக்கு பத்ம பூஷண் விருதுகளை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வழங்கினார்.

தமிழகத்தை சேர்ந்த பறை இசைக் கலைஞர் வேலு ஆசான், மிருதங்க கலைஞர் குருவாயூர் துரை, எழுத்தாளர் சீனி விஸ்வநாதன், எம்.டி. ஸ்ரீநிவாஸ், தெருக்கூத்து கலைஞர் புரிசை கண்ணப்ப சம்பந்தன், புதுச்சேரியை சேர்ந்த தவில் இசை கலைஞர் தட்சிணாமூர்த்தி மற்றும் நாராயணன் (மறைவு), சாஜன் பாஜங்கா, நீரஜா பாலியா, அஜய், ஹர்சந்திரன் சிங், பீம் சிங், செலான் ஏக்நாத், விலாஸ் கஜனன்ராவ், மகாவீர் நாயக், சோனியா நில்யானந்த், அசூல் ராமச்சந்திர பாலவ், வி.ஆர்.பஞ்சமுகி, லாவ்ஜிபாய், சுவாமி பிரதிபிலானந்தா, பிரசாந்த் பிரகாஷ், நாகேந்திரநாத் ராய், அசோக் லஷ்மண் சரப், அரவிந்த் சர்மா, அசுதோஷ் சர்மா, சுபாஷ் கெலுலால் சர்மா, ஹர்விந்தர் சிங், சந்திரகாந்த் சோம்புரா, வெங்கப்பா அம்பாஜி சுகலேகர், கேரளாவைச் சேர்ந்த கால்பந்து விளையாட்டு வீரரும் நடிகருமான விஜயன், ஆகியோருக்கு பத்ம ஸ்ரீ விருதுகளை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வழங்கினார்.

சென்னையை பூர்விகமாக கொண்ட சேதுராமன் பஞ்சநாதன் அமெரிக்க அரசின் தேசிய அறிவியல் அறக்கட்டளை தலைவராக பணியாற்றி வருகிறார். குடியரசுத் தலைவர் முர்முவிடம் இருந்து பத்மஸ்ரீ விருதினை அவர் பெற்றுக் கொண்டார்.

# தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் உள்ளது

## த.வெ.க. நிர்வாகிகள் தாக்கப்பட்டமைக்கு விஜய் கண்டனம்



சென்னை, முல்லை நகர் பகுதியில் தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கிய த.வெ.க. நிர்வாகிகள் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள த.வெ.க. தலைவர் விஜய், தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் ஏற்பட்டு வருவதாக குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

"சென்னை, வியாசர்பாடி, முல்லை நகர் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு த.வெ.கவினர் நிவாரணப் பொருள்களை வழங்கினர். பொலிஸார் இதைத் தடுத்ததோடு, அத்து மீறி செயல்பட்டுள்ளனர். அதைக்கண்டு த.வெ.க. மாவட்டச் செயற்குழு உறுப்பினர் கங்காவதி (வயது 45), மக்களுக்கு உதவி செய்வதைத் தடுப்பது ஏன்? என பொலிஸாரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அப்போது பொலிஸார் ஈவு இரக்கமின்றி, அவரை வயிற்றில் எட்டி உதைத்து கீழே தள்ளியுள்ளனர். இதைத் தடுக்கச் சென்ற மகளிரணியைச் சேர்ந்த தமிழ்ச்செல்வியின் ஆடையை பொலிஸார் பிடித்து இழுத்து தள்ளி விட்டுள்ளனர்.

தீவிபத்தில் பாதிக்கப்பட்டு, நிர்க்கதியாய் நிற்கும் மக்களுக்கு உதவுவது என்பது, பொலிஸால் தடுத்து நிறுத்தப்பட வேண்டிய மாபெரும் குற்றச் செயலா? பெண் நிர்வாகிகளை பூட்ஸ் காலால் வயிற்றில் எட்டி உதைப்பதையும், ஆடை கிழியும் அளவுக்கு அவர்களை இழுத்துத் தள்ளி விடும் பொலிஸின் செயலை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்றுக்கொள்கிறாரா? தற்போது தமிழகத்தில் நடப்பது பாசிச ஆட்சியே என்பதற்கு இதைவிட சாட்சி தேவையா?

மக்களுக்கான ஆட்சி நடத்துகிறோம் என்று வெற்று விளம்பரம் செய்யும் மு.க.ஸ்டாலின் அரசின், இந்தக் காட்டு மிராண்டித்தனமான அராஜகப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறேன். தவறிழைத்த பொலிஸார் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெண்களுக்குப் பாதுகாப்பில்லாத மாநிலமாக தமிழகத்தை மாற்றி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, பெண்களின் உரிமைகளைப் பறித்து, அவர்களை வீதியில் போராட வைத்திருக்கிறது.

இந்நிலை தொடர்ந்தால், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மிகப் பெரிய மக்கள் போராட்டத்தையும் சட்டப் போராட்டத்தையும் முன்னெடுக்கத் தயங்க மாட்டோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# முகக்கவசம் அணிவது தொடர்பில் மாநில அரசுகளே தீர்மானிக்கலாம்

## மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் தெரிவிப்பு

"கொரோனா பரவலை தீவிரமாக கண்காணித்து வருகிறோம். பொது மக்கள் முகக்கவசம் அணிவது கட்டாயம் இல்லை."

– இவ்வாறு என்று மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

ஜூன் 21 ஆம் திகதி சர்வதேச யோகா தினத்தையொட்டி புதுச்சேரி கடற்கரை சாலை காந்தி சிலை திடலில் முன்னோட்ட யோகா தின உற்சவம் நேற்று நடைபெற்றது. புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி தலைமை வகித்தார். துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் யோகா பயிற்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் பிரதாப்ராவ் யாதவ் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,



"யோகா என்பது உடல், மனநலம் காக்கும் பாரம்பரியக் கலையாகும். அதை சர்வதேச அளவில் செயல்படுத்தியவர் பிரதமர் மோடி. நாட்டில் கொரோனா பரவலை மத்திய சுகாதாரத் துறை தீவிரமாக கண்காணித்து வருகிறது.

ஆனால், பொதுமக்கள் முகக்கவசம் அணிய வேண்டும் என்பது கட்டாயமில்லை. மத்திய அரசும் அதை அறிவுறுத்தவில்லை. கரோனா பரவல் நிலைக்கு ஏற்ப மாநில அரசுகளே முகக்கவசம் அணிவது குறித்த முடிவுகளைத் தீர்மானிக்கலாம்." என்றார்.



# உக்ரைன் கிராமங்களை கைப்பற்றியது ரஷ்யா

ரஷ்யா மேலும் நான்கு உக்ரைன் எல்லை கிராமங்களை கைப்பற்றியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உக்ரைனுடனான எல்லைப் பகுதியில் பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்க புடின் உத்தரவிட்ட மறுநாள் சுமி பிராந்தியத்தில் இந்த கிராமங்களை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியுள்ளது.

இது குறித்து பிராந்திய ஆளுநர் ஒலே ரிஹோரொவ் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்குவதாகக் கூறி எதிரிப் படையினர் சுமி பிராந்தியத்தில் தங்களது முன்னேற்றத்தைத் தொடர்ந்து வருகின்றனர்.

தற்போது பிராந்தியத்தின் நோவென்கே, பசிவ்கா, வெசலிவ்கா மற்றும் ராவ்கா ஆகிய கிராமங்கள் ரஷ்ய படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

அந்த கிராமங்களில் வசித்து வந்த பொதுமக்கள் ஏற்கெனவே பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற்றப்பட்டனர்.” என்று தெரிவித்துள்ளார்.




# இந்தியாவுடனான போரில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது

## பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவிப்பு

இந்தியாவுடனான நான்கு நாள் போரில் பாகிஸ்தான் வெற்றி அடைந்தது என்று பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், நான்கு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவர், ஈரான் தலைநகர் தெஹ்ரானுக்குச் சென்ற போது பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போது இத்தகவலை பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் வெளியிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,



""காஷ்மீர் பிரச்சினை, தண்ணீர் பிரச்சினை என இந்தியா உடனான அனைத்து பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க நாங்கள் விரும்புகிறோம். மேலும், வர்த்தகம் மற்றும் தீவிரவாத ஒழிப்பு குறித்து எங்கள் அண்டை நாடுகளுடன் பேசவும் தயாராக இருக்கிறோம்.

ஆனால், பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்த இந்தியா முயன்றால், நமது நாட்டைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்போம். அமைதியான முறையில் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தால், நாமும் உண்மையிலேயே அமைதியை விரும்புகிறோம் என்பதை நாங்கள் காட்டுவோம்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அமைதி எங்கள் இரு நாடுகளுக்கும் பயனளிப்பது மட்டுமல்லாமல், பிராந்திய அமைதி மற்றும் செழிப்புக்கும் பங்களிக்கும். இந்தியாவுடனான நான்கு நாள் போரில் பாகிஸ்தான் வெற்றி அடைந்தது." என்று தெரிவித்துள்ளார்.



# பிரான்ஸ் ஜனாதிபதியை மனைவி அறைந்தாரா?

## வைரலாகும் காணொலி

பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரான் விமானத்தில் வைத்து அறையப்படுவது போன்ற காணொலி ஒன்று வெளியாகி இணையத்தில் வைரலாகி வருகின்றது.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான், வியட்நாம், இந்தோனேசியா மற்றும் சிங்கப்பூர் உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகின்றார்.

வியட்நாம் தலைநகர் ஹனோய் விமான நிலையத்திற்கு மனைவியுடன் வருகை தந்த போது, மேக்ரானின் மனைவி பிரிஜிட் மேக்ரான் அவரை கன்னத்தில் அறைவது போன்ற காணொளி வெளியாகியுள்ளது.

விமான கதவு திறந்தவுடன், மேக்ரானின் முகத்தில், சிவப்பு நிறை உடை அணிந்த ஒரு கை தள்ளுவது போன்று அந்த காணொலியில் பதிவாகியுள்ளது.

சிறிது நேரத்தில் சிவப்பு நிற உடையில் அவரது மனைவி பிரிஜிட் மேக்ரான், விமானத்தின் உள்ளே இருந்து வெளியே வருகின்றார்.

இதனால் அவரது மனைவி தான் அவரை அறைந்தார் என இணையத்தில் தகவல் பரவி வருகின்றது.

முதலில் இந்த காணொலியை நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாகிய பிரான்ஸ் ஜனாதிபதி அலுவலகம், பின்னர் காணொலி உண்மையானது என ஒப்புக்கொண்டுள்ளது.

அதேவேளையில், இது அவர்களுக்கு இடையேயான விளையாட்டான சண்டை என விளக்கமளித்துள்ளனர்.

இந்த காணொலி பிரான்ஸ் ஜனாதிபதிக்கு எதிராக ரஷ்ய ஆதரவு பெற்ற சமூகவலைத்தள கணக்குகளால் அதிகம் பகிரப்படுவதாக பிரான்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பக்கங்கள் - 3

கனடா முரசு

புதன்கிழமை 28/05/2025

## கனடாவில் வீடு உள்ளிட்ட கடன் நிலுவைகளை செலுத்த தவறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு




C2 ▶








# கனடா-அமெரிக்கா இடையேயான உறவு பரஸ்பர மரியாதையுடன் இருக்க வேண்டும்

## பிரித்தானிய மன்னர் சார்ளஸ் தெரிவிப்பு

கனடா மற்றும் அமெரிக்க இடையேயான உறவு பரஸ்பர மரியாதை அடிப்படையில் இருக்க வேண்டும் என பிரித்தானிய மன்னர் சார்ளஸ் கூறியுள்ளார்.

பிரித்தானிய மன்னர் சார்ளஸ் கனடாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். அவருடன் கமிலா ஒட்டாவாவை அடைந்தார்.

நாடாளுமன்றத்தின் தொடக்கக் கூட்டம் ஆடம்பரமாக கொண்டாடப்பட்டது. இதில் செனட் உறுப்பினர்கள் மற்றும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொது மன்ற உறுப்பினர்கள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் பிற பிரமுகர்கள், ஜஸ்டின் ட்ரூடோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

C2 ▶












# கனடாவில் வீடு உள்ளிட்ட கடன் நிலுவைகளை செலுத்த தவறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

கனடாவில் வீட்டுக் கடன், வாகன கடன்கள் மற்றும் கடன் அட்டை நிலுவைகள் செலுத்த தவறும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி, வேலை வாய்ப்பு இழப்புகள் மற்றும் உணவு, வீட்டு வசதிகளின் உயர்ந்த செலவுகள் ஆகியவை இந்த நிலைமைக்கு காரணங்களாக Equifax Canada வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல் காலாண்டில் மட்டும் 14 லட்சம் பேர் கடன் அட்டை கட்டணங்களை செலுத்த தவறியுள்ளனர்.

இது கடந்த ஆண்டைவிட 1.46 லட்சம் பேரினால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இளம் மற்றும் குறைந்த வருமானம் உள்ள பயனாளர்களிடையே இந்த நிலைமை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# பிரித்தானிய குழந்தைகளை மோசமாக நடத்திய கனடா

## மன்னிப்புக் கோர வலியுறுத்தல்

கனடாவில் 100,000 பிரித்தானிய குழந்தைகள் மோசமாக நடத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் கனடா மன்னிப்புக் கேட்கவேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

1869 இற்கும் 1948 இற்கும் இடையில், ஒரு லட்சத்துக்கும் அதிகமான பிரித்தானிய குழந்தைகள், ஆதரவற்றோர் இல்லங்களிலிருந்து கனடாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அவர்கள் பண்ணை வேலையாட்களாகவும், வீட்டு வேலை செய்வோராகவும் ஆக்கப்பட்ட நிலையில், அவர்களில் பலர் மோசமாக நடத்தப்பட்டுள்ளார்கள், துஷ்பிரயோகமும் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஆனால், இதுவரை கனடா அதற்காக மன்னிப்புக் கேட்டதில்லை.

தற்போது மன்னர் சார்ளஸ் கனடா சென்றுள்ள நிலையில், கனடா தனது மனதை மாற்றிக்கொள்ள இது ஒரு வாய்ப்பு என பாதிக்கப்பட்ட குழந்தைகள் சம்பந்தப்பட்ட பிரச்சார அமைப்பு தெரிவித்துள்ளது.

கனடா சென்றுள்ள மன்னர் சார்லஸ், இந்த பயணத்தை பயன்படுத்திக் கொண்டு கனடாவை மன்னிப்புக் கோர வலியுறுத்தவேண்டும் என்கிறார் பிரச்சாரகர்களில் ஒருவரான ஜான் ஜெஃப்கின்ஸ் என்பவர்.

ஜானுடைய தந்தையான பெர்ட், பிரித்தானியாவிலிருந்து கனடாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட 115,000 பிரித்தானியக் குழந்தைகளில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.



**கனடா - அமெரிக்கா...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிட்டத்தட்ட 50 ஆண்டுகளில் கனடாவின் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரின் தொடக்கத்திற்குத் தலைமை தாங்கிய முதல் இறையாண்மை கொண்டவர் மன்னர் சார்லஸ் ஆவார்.

அமெரிக்கா மற்றும் கனடா இடையேயான பதட்டங்கள் குறித்து பேசிய மன்னர், அமெரிக்காவிற்கும் அதன் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் இருதரப்பு உறவு பரஸ்பர மரியாதை அடிப்படையில் இருக்க வேண்டும் என்று கூறி ஒரு கூர்மையான கண்டனத்தை வெளியிட்டார்.

மேலும் அவர், ட்ரம்பின் கீழ் செயல்படும் அரசின் அச்சுறுத்தல்களைக் குறிப்பிட்டு, திறந்த வர்த்தக அமைப்பு மாறிக்கொண்டிருக்கிறது என்றும், கூட்டாளிகளுடனான கனடாவின் உறவுகள் என்றும் சுட்டிக்காட்டினார்.

செனட்டில் மன்னரால் வழங்கப்பட்ட சிம்மாசன உரையின் ஒரு பகுதியாக இது அமைந்தது அல்லது பிரதமர் மார்க் கார்னியின் புதிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கைகளை கோடிட்டுக் காட்டியது.

# முதியவர்களை ஏமாற்றி மோசடி செய்த கும்பல் கைது

கனடாவில் முதியவர்களை ஏமாற்றி மோசடிகளில் ஈடுபட்ட கும்பல் ஒன்றை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கனடாவின் மொன்ரியலில் வயோதிபர்களை இலக்கு வைத்து இந்த மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மொன்ரியல் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக நாடு முழுவதும் இதுபோன்ற ஊழல்கள் அதிகரித்து வருகின்றன என்றும் பல நகரங்களில் பொலிஸாரால் எச்சரிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மொன்ரியல் பொலிசார் கடந்த செவ்வாய்க்கிழமை மற்றும் புதன் கிழமையில் 34, 39, மற்றும் 45 வயதுடைய மூன்று ஆண்கள் மற்றும் 36, 37 வயதுடைய இரண்டு பெண்



களை கைது செய்தனர்.

இதில் மூவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய பொலிஸார், மற்ற இருவரை நிபந்தனையுடன் பிணையில் விடுவித்துள்ளனர்.

மோசடி முறைகள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும், இதுவரை புகாரளிக்கப்படாத திருட்டுகளும் இருக்கக்கூடும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், மொன்ரியல் நகரத்திற்கு தெற்கில் உள்ள லாங்குயே நகரில் மூன்று வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

திருடர்கள் தங்களது இலக்குகளை அணுகும்போது வழிகாட்டல் கேட்பது போல நடித்து, பின்னர் நன்றியாக ஒரு செயற்கை மோதிரம் அல்லது சங்கிலியை பரிசாக வழங்குகிறார்கள்.

அந்த பரிசை அணியச் சொல்வதற்குப் பயன்படுத்தப்படும் அந்த தருணத்தில், நபரின் உண்மையான நகைகளை திருடுகிறார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருடர்களுக்கு உதவும் மற்றொரு நபர் வாகனத்தில் காத்திருக்கிறார், மற்றும் திருட்டுக்குப் பிறகு அவர்கள் விரைவாக தப்பிச் செல்கின்றனர் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# இந்த வார ஆரம்பத்தில் கோடைகால அனுபவத்தை பெறும் டொராண்டோ

கடந்த நாள்கள் முழுவதும் மழையும் மேக மூட்டமுமாக இருந்த பின்னர், இந்த வாரத்தின் தொடக்கத்துடன் டொராண்டோ நகரம் ஒரு சிறிய கோடைகால அனுபவத்தை பெறவுள்ளது.

இந்த திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில், வெப்பநிலை 22°C வரை உயரும் என்றும், முழு நாளும் வெயிலுடன் இருக்கும் என்றும் கானடாவின் தேசிய வானிலை நிறுவனம் தெரிவித்துள்ளது.

“ஞாயிறன்று மழை வரக்கூடும் எனத் தெரிந்திருந்தாலும், எதிர்பார்த்ததைவிட அது மிகவும் கனமழையாகி விட்டது. டொராண்டோ மீது ஒரு மழை பட்டை நேரடியாக உருவாகி நீண்ட நேரம் தங்கி இருந்தது,” என அறிக்கையாளர் பில் கோல்டர் கூறினார்.

புதன்கிழமையிலிருந்து மீண்டும் மழை திரும்பும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், இப்போது சீரான காலநிலை மீண்டும் திரும்பியுள்ளதாகவும் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரத்தில், வழக்கமான வெப்பநிலையைவிட தினசரி உயர்ந்த வெப்பநிலைகள் மிகக் குறைவாகவே இருந்தன.

புதன்கிழமை (மே 29), வெப்பநிலை மாறி மீண்டும் குளிர்ச்சி மற்றும் மழை சாத்தியமுள்ளதாக கூறப்பட்டுள்ளது. அந்த நாளின் அதிகபட்ச வெப்பநிலை 14°C மட்டுமே இருக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.